Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 17, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 218

## பாதுகாப்பு சிக்கல்களுக்கு இணைந்து தீர்வு காண வேண்டும்: ராஜ்நாத் சிங் வலியுறுத்தல்




சென்னை, பிப்ரவரி 17 2023: பாதுகாப்பு சிக்கல்களுக்கு உலக நாடுகள் இணைந்து தீர்வு காண வேண்டும் என இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் ஏரோ இந்தியா 2023 கண்காட்சிக்கு இடையே பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஏற்பாடு செய்திருந்தார். பாதுகாப்புத் துறையில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் பகிரப்பட்ட முன்னேற்றம் என்ற விரிவான கருப்பொருளுடன் இந்த மாநாடு நடைபெற்றது.

முதலீடுகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, கூட்டு முயற்சிகள், இணை மேம்பாடு, இணை உற்பத்தி மற்றும் விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, கடல்சார் பாதுகாப்பு திறன் கட்டமைப்புக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் ஆலோசனை நடத்தப்படுகிறது.

உலக அளவில் பாதிக்கும்

இந்த மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாவது:-

உலகப் பாதுகாப்பு சூழலில் நாடுகளிடையே பெரும் ஒத்துழைப்பு அவசியம். விரைவான நடவடிக்கைகள் மூலம் பாதுகாப்பு குறித்த சிக்கல்களுக்குத் தீர்வு காண முயல வேண்டும். அதிவிரைவான மாற்றங்களை சமாளிக்க நிகழ்நேர ஒத்துழைப்பு அவசியம்.

பொருளாதாரம், பாதுகாப்பு, சுகாதாரம் அல்லது பருவநிலை போன்ற விஷயங்களில் ஏதேனும் பெரும் மாற்றம் ஏற்படுமானால் அது உலகளவில் அமைதி, பாதுகாப்பு விஷயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஒரு பிராந்தியத்தில் ஏற்படும் தாக்கம் பல வழிகளில் உலகம் முழுவதையும் பாதிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. உச்சிமாநாடுகள், மாநாடுகள், கூட்டங்கள் ஆகியவற்றின் போது கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம், பாதுகாப்பான முன்னேற்றமான எதிர்காலத்திற்கு ஏற்றவகையிலான தீர்வுகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியும்.

பயங்கரவாதம் போன்ற அச்சுறுத்தல்களை சமாளிக்க புதிய உத்திகளை வகுப்பது அவசியம். கூட்டுப்பாதுகாப்பு முயற்சிகள் இதற்கு தேவை. நட்பு நாடுகளுக்கு பாதுகாப்பு கூட்டாண்மையை இந்தியா அதிகரித்து வருவதுடன், தேசிய முன்னுரிமைகளின் அடிப்படையில் பல்வேறு நாடுகளுக்கு ஒத்துழைப்பை இந்தியா அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், 27 நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் உள்பட 80 நாடுகளைச் சேர்ந்த 160-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## பி.பி.சி. நிறுவனத்தில் வருமான வரி சோதனை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்





சென்னை, பிப்ரவரி 17 2023: பி.பி.சி. நிறுவனத்தில் வருமான வரி சோதனை நடத்தப்பட்டதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:--

எந்தவொரு துடிப்பான ஜனநாயகத்துக்கும், வெளிப்படைத் தன்மையோடும் சுதந்திரமாகவும் செயல்படும் அமைப்புகள் இன்றியமையாதவை. ஆனால், பா.ஜ.க. தலைமையிலான தற்போதைய மத்திய அரசின்கீழ் நாட்டின் மதிப்புக்குரிய அமைப்புகள் ஒருதலைப்போக்காகக் செயல்படுவதோடு அவற்றின் சுதந்திரத்தன்மையையும் முற்றிலுமாக இழந்துவிட்டன.

அண்மைக்காலமாக, அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை உள்ளிட்ட அமைப்புகள் அரசியல் கருவிகளாக அரசியல் எதிரிகளைத் குறிவைத்துத் தாக்குவதற்கு அளவுகடந்து பயன்படுத்தப்படுகின்றன. இந்த கருவிகளின் பட்டியலில் பி.பி.சி. நிறுவனத்தில் நடத்தப்பட்ட வருமான வரி "சர்வே"-யும் புதிதாக இணைந்துள்ளது.

மக்கள் அளித்த ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, இந்திய ஜனநாயகத்தையும், ஊடகச் சுதந்திரத்தையும் பாழடித்து வருவதற்கு காரணமானவர்கள், நடப்பவை அனைத்தையும் மக்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதையும், எதிர்வரும் தேர்தல்களில் இதற்கான தக்க பாடத்தை அவர்கள் புகட்டுவார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சமீபத்தில் கேன்சர் நோயால் இறந்த பெண் தலைமைக்காவலருக்கு 1997ம் ஆண்டு பேட்ச் காவலர்கள் அளித்த பணம் ரூ.13,34,500/- மற்றும் சென்னை பெருநகர காவல் துறை சார்பாக ரூ.1,30,000/- க்கான காசோலைகளை வழங்கினார்.

சென்னை, பிப்ரவரி 17 2023: சென்னை பெருநகர காவல், வண்ணாரப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்த ஆர்.சுபா, வ/47, க/பெ.ரமேஷ் (1997-2வது பேட்ச்) என்பவர் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் கடந்த 12.08.2022 அன்று சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டார். இவருக்கு கணவன், 1 மகள் மற்றும் 2 மகன்கள் உள்ளனர். மேற்படி பெண் தலைமைக்காவலர் சுபா குடும்பத்திற்கு உதவும் வகையில் தமிழகம் முழுவதும் பணியாற்றும் 1997-2வது பேட்ச் காவல் ஆளிநர்கள் அவர்களது சுயவிருப்பத்தின் பேரில் "காக்கும் காவல் நண்பர்கள்" என்ற வாட்ஸ் அப் குழு மூலம் மொத்தம் ரூ.13,34,500/- நிதி உதவி அளித்தனர். சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், இன்று (16.02.2023) காவல் ஆணையாளர் அலுவலகத்தில் மேற்படி 1997-2வது பேட்ச் காவல் ஆளிநர்கள் அளித்த பணம் ரூ.13,34.500/- மற்றும் சென்னை பெருநகர காவல் துறை சார்பாக ரூ.1,30,000/- ஆகிய காசோலைகளை இறந்த பெண் தலைமைக்காவலர் சுபா குடும்பத்தினரிடம் வழங்கினார். மேலும் மேற்படி காவலரின் குடும்பத்திற்கு வரவேண்டிய பணப்பலன்களை விரைவில் வழங்கவும், அவர்களது குடும்பத்திற்கு தேவையான உதவிகளை வழங்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) முனைவர் ஜெ.லோகநாதன், காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.



## வெளிவிவகார அமைச்சர் டாக்டர். எஸ் ஜெய்சங்கர் 12வது உலக ஹிந்தி மாநாட்டை துவக்கி வைத்தார், பிஜி உடனான எதிர்கால ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டது



சென்னை, பிப்ரவரி, 17 2023: வெளிவிவகார அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் 12வது உலக ஹிந்தி மாநாட்டை புதன்கிழமை பிஜி நாட்டின் நாடி நகரத்தில் தொடங்கி வைத்தார்.இந்த நிகழ்வில் பிஜியின் ஜனாதிபதி ரது வில்லியம் கட்டோனிவேரும் கலந்து கொண்டார், அங்கு வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அன்புடன் வரவேற்கப்பட்டார். உலக ஹிந்தி மாநாட்டில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், தனது நாடாளுமன்ற சகாக்களுடன் நந்தியில் உள்ள ஸ்ரீ சிவ சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கும் சென்றார். இந்த ஆண்டு மாநாட்டின் முக்கிய கருப்பொருள் 'இந்தி- பாரம்பரிய அறிவிலிருந்து செயற்கை நுண்ணறிவு'. இந்தி மொழி வளர்ச்சி தொடர்பான பல கண்காட்சிகள் மாநாடு நடைபெறும் இடத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

உலக ஹிந்தி மாநாடுகள் 1973 இல் வார்தாவின் ராஷ்ட்ரபாஷா பிரச்சார் சமிதியால் கருத்துருவாக்கம் செய்யப்பட்டன. முதல் உலக ஹிந்தி மாநாடு ஜனவரி 10-12, 1975 இல் இந்தியாவின் நாக்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவரை 11 உலக ஹிந்தி மாநாடுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இம்முறை, மாநாட்டின் போது, இந்தியா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த ஹிந்தி அறிஞர்கள், ஹிந்தித் துறையில் சிறப்பான பங்களிப்பிற்காக விஷ்வ ஹிந்தி சம்மான் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# அறிமுகமே பான் இந்தியா படம் என்பதில் பெருமை தான் மகிழ்ச்சியில் மைக்கேல் பட நாயகி தீப்ஷிகா

சென்னை, பிப்ரவரி 17 2023: இயக்குநர் ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் சமீபத்தில் வெளியான மைக்கேல் திரைப்படம் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. பான் இந்தியா படமாக வெளியான இந்த படத்தில் கதாநாயகனாக சந்தீப் கிஷன் நடிக்க, முக்கிய வேடத்தில் விஜய்சேதுபதி மற்றும் இயக்குனர் கௌதம் மேனன் ஆகியோர் நடித்துள்ளனர். கதாநாயகிகளாக திவ்யான்ஷா கவுசிக், வரலட்சுமி ஆகியோருடன் கவனிக்கத்தக்க வேடத்தில் நடித்துள்ளார் நடிகை தீப்ஷிகா. இந்த படத்தில் கௌதம் மேனனின் இரண்டாவது மனைவியாக, சிறு வயது சந்தீப் கிஷனின் தாயாக, கிளப்பில் பாடும் பாடகியாக, ஒரு அழகு பொம்மை போல் காட்சியளித்து அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தி நடித்துள்ளார் தீப்ஷிகா.



சென்னையிலேயே பிறந்து வளர்ந்து, படித்த, நம்ம ஊர் பொண்ணு தான் தீப்ஷிகா. ஆனால் தமிழில் நடித்துக்கொண்டிருக்கும் போதே தெலுங்கில் இருந்து வாய்ப்புகள் தேடி வர ஆரம்பித்தன. அந்த வகையில் தெலுங்கிலேயே கிட்டத்தட்ட அரை டஜன் படங்களில் நடித்து வருகிறார் தீப்ஷிகா. இந்த படங்கள் அடுத்தடுத்து வெளியாகும் விதமாக தயாராகி வருகின்றன. அதன் முன்னோட்டமாகத்தான் தீப்ஷிகாவின் திரையுலக பயண எல்லையை முதல் படத்தில் இருந்தே விரிவாக்கும் விதமாக பான் இந்தியா படமாக வெளியாகியுள்ள மைக்கேல் அவருக்கு மிகப்பெரிய அளவில் வெளிச்சத்தையும் வரவேற்பையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

இந்த படத்தில் நடித்த அனுபவங்கள் குறித்தும், அடுத்தடுத்து தான் நடித்து வரும் படங்கள் குறித்தும் உற்சாகமாக பகிர்ந்து கொண்டுள்ளார் தீப்ஷிகா.

“மைக்கேல் திரைப்படத்தில் நான் நடித்திருந்த ஜெனிபர் கதாபாத்திரத்திற்கு திரையுலகில் இருந்தும் நண்பர்களிடம் இருந்தும் ரசிகர்களிடமிருந்தும் மிகப்பெரிய அளவில் பாராட்டுக்கள் கிடைத்து வருகின்றன. இதற்கு இயக்குநர் ரஞ்சித் ஜெயக்கொடி சாருக்கு தான் நன்றி சொல்ல வேண்டும். சொல்லப்போனால் முதலில் இந்த கதாபாத்திரத்தில் வேறு ஒரு பிரபல நடிகை நடிப்பதாகத்தான் இருந்தது.. கடைசி நேரத்தில் சில காரணங்களால் அவர் விலகிவிட, இயக்குநர் ரஞ்சித் ஜெயக்கொடி என்னை அழைத்து இந்த கதாபாத்திரத்தில் நடிக்க முடியுமா என கேட்டார்,

இந்த கதாபாத்திரம் குறித்து அவர் கூறிய அந்த ஒன்லைன் என்னை உடனே மைக்கேல் படத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொள்ள வைத்துவிட்டது. காரணம் படத்தில் என்னுடைய ஜெனிபர் கதாபாத்திரத்தை மையப்படுத்தி தான் மொத்த படமும் நகரும் விதமாக கதை அமைந்திருந்தது. கதை கேட்கும்போதே இந்த கதாபாத்திரம் ரசிகர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் என என்னால் உணர முடிந்தது. ஒரு சின்ன கதாபாத்திரம் என்றில்லாமல் முதல் பாதி முழுவதும் ஆங்காங்கே வந்து செல்லும் விதமாகவும் கிளைமாக்ஸில் வரும் விதமாகவும் காட்சிகளை அழகாக கோர்த்திருந்தார் இயக்குநர் ரஞ்சித் ஜெயக்கொடி.

அதுமட்டுமல்ல விஜய்சேதுபதி, சந்தீப் கிஷன், இயக்குநர் கௌதம் மேனன் உள்ளிட்ட பெரிய நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பும் இந்த படத்தின் மூலம் அமைந்தது. படப்பிடிப்பில் கௌதம் மேனன் சாரை பார்க்கும்போது ஒரு முழு நேர நடிகராகவே அவர் மாறிவிட்டதை காண முடிந்தது. உடன் நடிப்பவர்களுக்கும் சரி, இயக்குநர்களுக்கும் சரி அவர் ஒரு வசதியான நடிகராகவே மாறிவிட்டார்.

விஜய்சேதுபதியுடன் எனக்கு இன்னும் நிறைய காட்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் படத்தின் நீளம் கருதி அவருடன் நான் நடித்த சில காட்சிகள் இதில் இடம்பெற முடியாமல் போய்விட்டது. விஜய் சேதுபதி யதார்த்தமான ஒரு நடிகர். எல்லோரையுமே சமமாக மதித்து பழக கூடியவர். சிறைச்சாலை லொகேஷனில் காட்சிகளை படமாக்கியபோது அங்கே பின்னணியில் துணை நடிகர்களாக நின்று கொண்டிருந்தவர்களிடம் கூட தானே சென்று அந்த காட்சி பற்றி கூறி, இப்படியெல்லாம் நீங்கள் உங்கள் நடிப்பை வெளிப்படுத்த வேண்டும் என விளக்கியதை பார்க்கும்போது ரொம்பவே ஆச்சரியமாக இருந்தது.

படத்தில் கதாநாயகன் சந்தீப் கிஷனுடன் நான் இணைந்து நடிக்கும் விதமாக காட்சிகள் எதுவும் இல்லை.. ஆனாலும் இந்த படக்குழுவினர் அனைவருமே ஒரு நட்பு வட்டத்தில் இணைந்து பணியாற்றியதால் தனக்கான காட்சிகள் இல்லை என்றாலும் படப்பிடிப்பை கவனிப்பதற்காக வந்து விடுவார் சந்தீப் கிஷன். படத்தில் அவரது சிறு வயது கதாபாத்திரத்திற்கு நான் அம்மாவாக நடித்திருந்தாலும், எந்த இடத்திலும் ஒரு அம்மா கதாபாத்திரம் என்பது போல காட்டாமல் ஜெனிபர் என்கிற கதாபாத்திரத்தையே இயக்குநர் ரஞ்சித் ஜெயக்கொடி முன்னிறுத்தி இருந்தார். இந்தப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டபோது என்னுடைய கதாபாத்திரம் இந்த அளவிற்கு பேசப்படும் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. படம் பார்த்துவிட்டு பலரும் பாராட்டினார்கள். அதேசமயம் ஒரு சிலர் இந்த படத்தில் கே ஜி எப் பட சாயல் தெரிகிறது என்றும் கூறினார்கள்.. இந்த படத்தின் அறிமுக ஒளிப்பதிவாளர் கிரண் கௌசிக் பிரபல ஒளிப்பதிவாளர் ரவிவர்மாவிடம் உதவியாளராக பணியாற்றியவர். படப்பிடிப்பின்போது அவரை நான் பிரபல ஒளிப்பதிவாளர் என்றே நினைத்தேன். அந்த அளவுக்கு பிரமிக்க வைக்கும் விதமாக இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். அவரது ஒளிப்பதிவும் கூட கே ஜி எப் படம் போன்ற ஒரு உணர்வை படம் பார்ப்பவர்களுக்கு கொடுத்திருக்கலாம். தற்போது தெலுங்கில் ‘உத்வேகம்’ என்கிற படத்தில் நடித்து வருகிறேன். இந்த படத்தில் எனக்கு வழக்கறிஞர் கதாபாத்திரம். அது மட்டுமல்ல சமூக ஆர்வலரும் கூட.. பொது பிரச்சனைகளில் தலையிட்டு அவற்றிற்கு சட்டரீதியாக போராடும் ஒரு வலுவான கதாபாத்திரம். படத்தின் கதாநாயகனாக அருண் ஆதித்யா நடித்துள்ளார் அவருக்கும் கூட வழக்கறிஞர் கதாபாத்திரம் தான்.. எங்கள் இருவருக்கும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் படத்தை சுவாரஸ்யமாக நகர்த்தி செல்லும்.

அடுத்ததாக தெலுங்கில் நான் நடித்துள்ள ராவண கல்யாணம் திரைப்படம் ரிலீசுக்கு தயாராகி வருகிறது. இந்தப் படமும் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி என நான்கு மொழிகளில் உருவாகியுள்ளது. இதில் சந்தீப் மாதவ் கதாநாயகனாக நடித்துள்ளார். நடிகர் சிம்ஹா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

அதுமட்டுமல்ல தெலுங்கு சினிமாவின் பிரபல முன்னணி நடிகர் ரவிதேஜாவின் தயாரிப்பில் உருவாகும் ஒரு படத்திலும் கதாநாயகியாக நடித்து முடித்து விட்டேன். தொடர்ந்து தெலுங்கு திரையுலகில் இருந்து என்னைத்தேடி பட வாய்ப்புகள் வருவதால் தற்போதைக்கு தெலுங்கில் முழு கவனம் செலுத்தி நடித்து வருகிறேன். தமிழிலும் நான் நடிக்கும் ஒரு படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது. விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கிறேன். தெலுங்கில் ஒரு பான் இந்தியா படத்தில் அறிமுகமானது சந்தோசம் தான்.. அடுத்த படமும் நான்கு மொழிகளில் வெளியாக இருக்கிறது. இப்படி அடுத்தடுத்து பான் இந்தியா படங்களில் நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததை பெருமையாக நினைக்கிறேன். இன்னும் உற்சாகமாக எனது பயணத்தை தொடர்கிறேன்” என்கிறார் தீப்ஷிகா.

# மூத்த குடிமக்கள் ஆரோக்கிய மேம்படுத்தலை பெறுகிறார்கள்: மணிபால்சிக்னா ஹெல்த் இன்சூரன்ஸ், முதியோருக்கான சிறப்புத் திட்டமான ‘மணிபால்சிக்னா பிரைம் சீனியர்’ ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, பிப்ரவரி 17 2023: : மணிபால்சிக்னா ஹெல்த் இன்சூரன்ஸ், மூத்த குடிமக்கள் தங்களுடைய வாழ்க்கையின் பொன்னான ஆண்டுகளுக்குத் தேவையான தரமான மருத்துவ சேவையை அணுகுவதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள, தனது புதிய ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டமான ‘மணிபால்சிக்னா பிரைம் சீனியர்’-ஐ அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய திட்டம் குறைந்த காத்திருப்பு காலங்களுடன் நெகிழ்வுத்தன்மையை அளிக்கிறது மற்றும் 91வது நாளிலிருந்து ஏற்கனவே இருக்கும் நோய் நிலைமைகளுக்கு காப்புறுதியை வழங்குகிறது.



மணிப்பால் சிக்னா ஹெல்த் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பிரசூன் சிக்தார் புதிய உடல்நலக் காப்பீட்டுத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,“சுகாதாரக் காப்பீட்டு நிபுணராக, மணிபால்சிக்னா வில் உள்ள நாங்கள் பல்வேறு பிரிவு மக்கள் அவர்களுக்குத் தேவையான தரமான சுகாதாரம் எளிதாகப் பெறுவதற்கு திட்ட கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளோம். மூத்தவர்களுக்கு தனிப்பட்ட சுகாதாரத் தேவைகள் இருப்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் அவர்கள் சிறந்த சுகாதாரத்திற்கான அணுகலுக்கு தகுதியானவர்கள். எங்கள் புதிய உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம், மூத்த குடிமக்களுக்கு அவர்களின் அன்றாட சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறந்த காப்பு, சிறந்த கட்டுப்பாடு மற்றும் சிறந்த கவனிப்பு ஆகியவற்றை வழங்குவதன் மூலம், அதை உண்மையாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் முதியவர்களின் வாழ்வில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்."என்று கூறினார்.

சிக்தர் மேலும் கூறுகையில், “மக்கள் தங்கள் வாழ்வின் பொன்னான ஆண்டுகளில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை கருத்தில் கொண்டு இந்த புதிய திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்பு மருத்துவ சிக்கல்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அவர்களில் பெரும்பாலோர் தங்கள் ஓய்வூதிய நிதியில் வாழ்வதால் வருமான பிரச்சனை இருக்கலாம். இவ்வாறு வளர்ந்து வரும் முதியவர்களின் தேவைகளையும், அதிகரித்து வரும் மருத்துவ மருத்துவ செலவுகளையும் புரிந்து கொண்டு, நாங்கள் மணிபால் சிக்னா பிரைம் சீனியரை அறிமுகப்படுத்தியுள்ளோம். பிரைம் சீனியர் திட்டமானது, மணிபால்சிக்னா வின் வேறுபட்ட திட்டங்களின் வரலாற்றை கருத்தில் கொண்டு, பரந்த அளவிலான நன்மைகளின் மத்தியில் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முந்தைய மற்றும் பிந்தைய காப்பீடு, சாலை மற்றும் விமான ஆம்புலன்ஸ் வசதி, நன்கொடையாளர் செலவுகளுக்கான காப்பு, தங்குமிடம் மற்றும் பகல்நேரப் பராமரிப்பு வசதிகள் உள்ளிட்ட உயர்தர வசதிகளை வழங்குகிறது. மூத்த குடிமக்களுக்கு முழுமையான மன அமைதியை வழங்குவதற்காக, அவர்களுக்கு மிகவும் தேவைப்படும்போது தரமான மருத்துவப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என்பதை அறிந்துகொண்டு காப்பீட்டுத் தொகைக்கான விருப்பங்கள் வரம்பு ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 50 இலட்சம் வரை மலிவு விலையில் உள்ளது."என்று கூறினார்.

மணிபால்சிக்னா பிரைம் சீனியர் திட்டம், ‘பிரைம் சீனியர் கிளாசிக்’ மற்றும் ‘ப்ரைம் சீனியர் எலைட்’ என இரண்டு வெவ்வேறு வகைகளில் வருகிறது. இந்த பிரைம் சீனியர் கிளாசிக் திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு ஒரு அனைத்து உள்ளடக்கிய, விரிவான அதேசமயம் பணத்திற்கு மதிப்புள்ள கவரேஜைத் தேடுதல், முதியவர்களின் நோய் மற்றும் ஆரோக்கியப் பயணத்தில் அவர்களை பயனடையச் செய்தல் மற்றும் அவர்களின் நிதிகளைப் பாதுகாத்தல், போன்ற பரந்த அளவிலான விஷயங்களுக்கான காப்பை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. மறுபுறம், பிரைம் சீனியர் எலைட் என்பது கிளாசிக் திட்டத்தால் வழங்கப்படும் நன்மைகளை மேம்படுத்துகிற ஒரு செறிவூட்டப்பட்ட திட்டமாகும், மேலும் காப்பீடு செய்யப்பட்ட முதியவர்கள் சிறந்த கவனிப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்கு, பகிரப்பட்ட தங்குமிடத்திற்கான தினசரி ரொக்கம், பிரீமியம் தள்ளுபடி நன்மை, உத்தரவாத உடல்நல சோதனைகள் மற்றும் போனஸ் மற்றும் பல போன்ற பல்வேறு கூடுதல் அம்சங்களை வழங்குகிறது.

# 7அப் இன் புதிய பிராண்ட் தூதராகியுள்ள இந்தியாவின் நேஷனல் கிரஷ்ஷிற்கு ஒரு புதிய கிரஷ் ஏற்பட்டுள்ளது

சென்னை, பிப்ரவரி 17 2023: இந்தக் காதலர்தினத்தை முன்னிட்டு, ஒரு புத்தம் புதிய காதல் கதையை வெளியிடும் வகையில், கிளியர் ரிஃப்ரெஷிங் பிராண்டான 7அப், யூத் ஐகானும் சூப்பர்ஸ்டாருமான ராஷ்மிகா மந்தனா அவர்களைத் தனது பிராண்ட் தூதராக அறிவித்துள்ளது. இந்தக் கூட்டாண்மை, ஒரு குதூகலமான மற்றும் மகிழ்ச்சியை உண்டாக்கத்தக்க வீடியோவின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், பேரழகுடன் தோன்றும் ராஷ்மிகா 7அப்’இன் பிடோடிடோடிஐ தனது வேலண்டைனாகத் தேர்ந்தெடுத்து பறக்கும் முத்தம் தருகிறார். இந்தியாவின் நேஷனல் கிரஷ்ஷான ராஷ்மிகா மந்தனா, தனது குதூகலமூட்டும் அடுத்த-வீட்டுப்-பெண் தன்மைகளின் மூலம் பல மில்லியன் இந்தியர்களின் இதயத்தில் இடம்பெற்றுள்ளார். அவரது அடக்கமாக மற்றும் துடிப்பான பண்புகள், தற்போத அவரை நாட்டின் முன்னணி பெண் சூப்பர்ஸ்டார்களில் ஒருவராக மாற்றியுள்ளது. இந்த பிளாக்பஸ்டர் கூட்டாண்மை, நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுடன் 7அப்’இன் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும்.



இந்த நியமனம் குறித்துப் பேசிய, பெப்சிகோ இந்தியா, எனர்ஜி, ஹைட்ரேஷன் & ஃபிளேவர்ஸ் பிரிவின், முதுநிலை சந்தையாக்கல் இயக்குனர் திர.நசீப் பூரி அவர்கள், “ராஷ்மிகா அவர்கள் தனது புத்துணர்ச்சியூட்டும் துடிப்பான குணாதிசியங்களின் மூலம் இந்தியாவின் மிகவும் விரும்பப்படும் நட்சத்திரங்களில் ஒருவராக மிக வேகமாக மாறிவிட்டார்.

உண்மையாகவே அவர் 7அப்பிற்கு மிகச்சிறந்த பொருத்தமாவார். அவரது பரவலான புகழும் உறுதியான ரசிகர்கள் அடித்தளமும் பரந்துபட்ட நுகர்வோர் பிரிவில் எங்களது அடைதலை நிச்சயம் அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களோடு இத்தகைய ஒரு புதிய புத்துணர்ச்சியூட்டும் முகம் இணைந்துள்ள குறித்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் இதன் மூலம் அற்புதமான பல விளம்பரப் படைப்புகளை உருவாக்கவுள்ளோம்.” என்று கூறினார். இக்கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த இளம் நட்சத்திரம் ராஷ்மிகா மந்தனா அவர்கள், “7அப் இன் புதிய முகமாகத் திகழ்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். புத்துணர்ச்சி என்ற வார்த்தைக்கு அர்த்தமான இந்த பானம் திகழ்கிறது. இந்தப் பயணத்தைத் துவக்குவதில் நான் ஆவலோடு காத்திருக்கிறேன். அனைவரும் இதன் மூலம் பல சிறந்த விளம்பரங்களை எதிர்பார்க்கலாம். இப்புதிய அவதாரத்தில் நேயர்களின் அன்பைப் பெறு நான் மிகுந்த ஆவலோடு உள்ளேன்.” என்று கூறினார்.

ராஷ்மிகா 7அப்டி’இன் புதிய தொலைகாட்சி விளம்பரத்தில் பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் தளங்களில் நாடு முழுவதும் விரைவில் தோன்றவுள்ளார்.

# வெராண்டா ஐஏஎஸ் நிறுவனம் குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாராவோருக்கான முழுமையான உறைவிடப் பயிற்சித் திட்டத்தை சென்னையில் தொடங்கியுள்ளது: தலைமை வழிகாட்டியாக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம் செயல்படுகிறார்







சென்னை, பிப்ரவரி, 17 2023: வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸின் துணை நிறுவனமான வெராண்டா ஐஏஎஸ் நிறுவனம் குடிமைப் பணித் தேர்வுக்குத் தயாராவோருக்காக, அகாடமி ஃபார் சிவில் சர்வீஸ் ஆஸ்பிரண்ட்ஸ் (ஏசிஎஸ்ஏ) என்ற முழுமையான உறைவிடப் பயிற்சித் திட்டத்தை சென்னையில் தொடங்கியுள்ளது. இதன் தொடக்க நிகழ்ச்சியில், வெராண்டா ஐஏஎஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பரத் சீமான், "அறிவொளிச் சுடர்" என்ற பெயரிலான ஜோதியை முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி திரு.சகாயத்திடம் ஒப்படைத்தார்.

ஒரு ஆண்டு காலத்திற்கான இந்தப் பயிற்சித் இந்த திட்டத்தில், வெராண்டா உதவித்தொகை தேர்வில் (வெஸ்ட்) தேர்ச்சி பெறுபவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்த அகாடமி மாணவர்களுக்கு தனிப்பட்ட வழிகாட்டல் ஆதரவை முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம் வழங்குவார். இந்தியா முழுவதிலும் உயர்மட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் ஆர்வமுள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு, வேலைவாய்ப்புப் பயிற்சியை எளிதாக்குவார்கள்.

விழாவில் பரத் சீமான் பேசுகையில், "இந்த திட்டல் மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கு, முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயத்தின் திறமையும் அந்தஸ்தும் எங்களுடன் இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர் எங்களது அடையாளத்தின் மதிப்புகளுடன் இணைந்த ஒரு முன்மாதிரி நபராகத் திகழ்கிறார். அவர் மாணவர்களை ஊக்குவிப்பதோடு, அவர்களின் பயிற்சிப் பயணத்தின் போது அவர்களுக்குத் தேவையான தெளிவை அளித்து, வெற்றியை நோக்கி அவர்களை வழிநடத்துவார்." என்றார்.


முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியும், தலைமை ஆலோசகருமான சகாயம் கூறுகையில், "தேசத்தின் நிர்வாகப் பணிகளில் சேரவும், தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் பங்கேற்கவும் விரும்பும் இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த உறைவிப் பயிற்சித் திட்டத்தின் தொடக்கத்தின் மூலமாக, மாணவர்களின் பயிற்சிப் பயணத்தில் ஒரு முழுமையான அணுகுமுறையை வெராண்டா லேர்னிங் உருவாக்கி உள்ளதுடன் அவர்களது தேர்வுத் தயாரிப்புக்கு அருமையான அடித்தளத்தை அமைத்துள்ளது." என்றார்.

அறிவொளிச் சுடர் ஜோதி கீழ்க்கண்ட தேதிகளில் தமிழ்நாட்டின் 6 இடங்களுக்கு பயணிக்கும்.

25 பிப்ரவரி 2023 வேலூர், 26 பிப்ரவரி 2023 திருநெல்வேலி, 4 மார்ச் 2023 சேலம், 5 மார்ச் 2023 கோயம்புத்தூர், 11 மார்ச் 2023 திருச்சி, 12 மார்ச் 2023, மதுரை இந்த இடங்களில் வெஸ்ட் தேர்வும் நடத்தப்படும்.

ஏசிஎஸ்ஏ 150 மாணவர்களை தமது சென்னை "பிருந்தாவன் வளாகத்தில்" இணைத்துக் கொள்ளும். அத்துடன் 5 மாணவர்களுக்கு 100 சதவீதம் உதவித்தொகை வழங்கப்படும். இவர்களின் பெயர்கள் 19 மார்ச் 2023 அன்று சென்னையில் நடைபெறும் ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சியில் அறிவிக்கப்படும்.

# அமரர் கல்கி வாழ்க்கை வரலாறு இயக்குனர் மணிரத்னம் வெளியிட்டார்



சென்னை, பிப்ரவரி 17 2023: பொன்னியின் செல்வன் படைத்த அமரர் கல்கி தமிழின் சிறந்த எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், கலை விமர்சகர், பாடலாசிரியர். இவை அனைத்துக்கும் மேலாக ஆழ்ந்த தேச பக்தர். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று மும்முறை சிறை சென்றவர்.

அவரது எழுத்துக்களைப் போலவே வாழ்க்கையும், மிகவும் சுவாரசியமானது. "கல்கி: பொன்னியின் செல்வர்" என்ற தலைப்பில் பத்திரிகையாளர் எஸ். சந்திர மௌலி எழுதியுள்ள அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாற்றை இயக்குனர் மணிரத்னம் இன்று (13 பிப்ரவரி 2023) வெளியிட்டார். புத்தகத்தின் முதல் பிரதிகளை அமரர் கல்கியின் பேத்திகளான திருமதி. சீதா ரவி, திருமதி. லட்சுமி நடராஜன் இருவரும் பெற்றுக் கொண்டனர். "அமரர் கல்கியின் எழுத்துக்கள் தலைமுறைகள் தாண்டி ரசிக்கப்படுவது அவரது எழுத்தின் ஈர்ப்புக்கு சாட்சி. பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் முதல் பாகம் பெரும் வரவேற்பினைப் பெற்று, இரண்டாம் பாகம் விரைவில் வெளியாக இருக்கும் நிலையில் அவரது வாழ்க்கை வரலாறு வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது" என்று புத்தகத்தை வெளியிடுகையில் இயக்குனர் மணிரத்னம் குறிப்பிட்டார். "பொன்னியின் செல்வனை எழுத்தில் படித்து, திரையில் பார்த்து ரசித்த இன்றைய இன்ஸ்டாகிராம் தலைமுறையினர் தெரிந்துகொள்ளும் வகையில் அவரது ஆளுமையைப் பற்றி மிகவும் விறுவிறுப்பாக இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார் திருமதி.சீதா ரவி.

220 பக்கங்கள் கொண்ட "கல்கி: பொன்னியின் செல்வர்" புத்தகத்தின் விலை ரூ.225/- வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 9 சாரங்கபாணி தெரு, தி நகர், சென்னை 600017. தொலைபேசி: 044-28340488.

**பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் வழங்கும், தயாரிப்பாளர் எஸ்.லக்ஷ்மன் குமார் தயாரிப்பில் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ராம் சங்கையா இயக்கத்தில், இசையமைப்பாளர் கே.எஸ்.சுந்தர மூர்த்தி இசையில், மகேஷ் முத்து சாமி, ஒளிப் பதிவில், சிவன் தீஸ்வரன் எடிட்டிங்கில், நட்சத்திரங்கள்:- பசுபதி, ரோஹிணி,**

**தீபா, அம்மு அபிராமி, விவேக் பிரசன்னா, முகேஷ், மற்றும் பலர் நடிக்கும் "தண்டட்டி" விரைவில் உலகமெங்கிலும் உங்கள் அபிமான திரையரங்குகளில்.**




# கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தவிர்க்கக்கூடியதாக இருந்தாலும் இந்நோயால் ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கு ஒரு பெண் இறக்கிறார்

## டாக்டர் நந்தினி ஏழுமலை, மகப்பேறு மருத்துவர், ஃபோர்டிஸ் மருத்துவமனை வடபழனி



சென்னை, பிப்ரவரி, 17 2023: கருப்பை வாயின் உயிரணுக்களில் காணப்படும் ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் (எச் பி வி), கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான முதன்மைக் காரணமாகும். எச் பி வி அல்லது பாலியல் ரீதியாக பரவும் நோய்களுக்கு ஆளான ஒரு நபர் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்த் தொற்றை பெறலாம். இந்த வைரஸை எதிர்த்து உடல் எதிர்ப்பு சக்தி போராடி அழித்தாலும் சிறிய அளவிலான வைரஸ்கள் நோயெதிர்ப்பு சக்தியில் இருந்து தப்பித்து உடலில் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்து புற்று நோய் அணுக்களாக உருப்பெறுகின்றன. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தவிர்க்க, இந்த தொல்லை தரும் செல்கள் புற்றுநோயாக உருவாகும் முன் சிகிச்சை அளிப்பது அவசியம். தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய ஒரே புற்றுநோய் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயாகும். தடுப்பூசிக்கு பரிந்துரைக்கப்படும் வயது 14 ஆகும்.

அதன் காரணங்கள் மற்றும் அறிகுறிகளை பற்றி கீழே விரிவாக ஆராய்வோம்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் என்றால் என்ன?

கர்ப்பப்பை வாயை சுற்றியுள்ள பகுதியில் தான் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் முதலில் உருவாகிறது. கருப்பை வாய் என்பது கருப்பையின் கீழ் பகுதி யோனியுடன் சேரும் பகுதியாகும். உங்கள் தாம்பத்திய வாழ்க்கை மற்றும் இனப்பெருக்கத்தை பாதிக்கும் முன் விரைவில் சிகிச்சை பெறுவது மிகவும் முக்கியம். ஆண்டுதோறும் 1 மில்லியனுக்கும் குறைவான நிகழ்வுகள் கண்டறியப்பட்டாலும், இது பெண்களின் இறப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் இரண்டு முதன்மை வடிவங்கள் ஸ்குவாமஸ் செல் கார்சினோமாஸ் மற்றும் அடினோ கார்சினோமாஸ் ஆகும். அடினோகார்சினோமா கர்ப்பப்பை வாய் குழாயில் வளர்கிறது, அதே சமயம் ஸ்குவாமஸ் செல் கார்சினோமா கருப்பை வாயின் வெளிப்புற அடுக்கில் வளரும்

புள்ளியியல் விவரம் 2022 இன் படி, கடந்த ஆண்டு ஆசியாவில் 39% பாதிப்பு - 18% சீனாவில் மற்றும் 21% இந்தியாவில் உள்ளடங்கி - காணப்பட்டது, இதன் விளைவாக 40% உயிர் இழப்புகள் ஏற்பட்டன.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயானது தடுப்பூசி மூலமாகவோ அல்லது பேப் ஸ்மியர் பரிசோதனை மூலம் முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கக்கூடிய ஒரே புற்றுநோயாகும். ஆரம்ப கட்ட தலையீட்டால் சிகிச்சையை எளிதாக்குவதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லாவிட்டாலும், அதை முழுமையாக குணப்படுத்த முடிந்திருக்கிறது.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான காரணங்கள்: இந்த நோய் ஏற்படுவதற்கான சரியான காரணம் தெரியவில்லை என்றாலும், எச் பி வி சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் முதன்மையான காரணங்களாக மனித பாப்பிலோமா வைரஸ் மற்றும் பால்வினை நோய்களுடன் தொடர்ந்து ஏற்படும் தொடர்புகளே என்று கருதப்படுகிறது. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் வளர்ச்சியானது புகைபிடித்தல், பாதுகாப்பற்ற உடலுறவு மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பு பலவீனமடைதல் போன்ற வாழ்க்கை முறை காரணிகளாலும் பாதிக்கப்படலாம். ஆரோக்கியமான உயிரணுக்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் இறந்துவிடுவதற்குப் பதிலாக, மாற்றப்பட்ட டிஎன்ஏ, உயிரணுக்களை பெருமளவில் பெருக உடலை அறிவுறுத்துகிறது. இந்த நீண்டகால, மாற்றப்பட்ட செல்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை உருவாக்குகின்றன.

ஒரு புதிய ஆய்வின்படி, சானிட்டரி பேட்களில் உள்ள டையாக்ஸின்கள் உடலில் இனப்பெருக்க அமைப்பை பாதித்து, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு வழிவகுக்கலாம் என்று கூறுகிறது.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகள்:

அறிகுறிகளைப் பற்றி அறிந்து எச்சரிக்கையாக இருப்பது மிகவும் முக்கியம், மேலும் பின்வருவனவற்றில் ஏதேனும் அறிகுறி உங்களுக்கு ஏற்பட்டால், உங்களால் முடிந்தவரை விரைவில் மகளிர் மருத்துவ நிபுணரைப் பார்க்கவும்.

உடலுறவின் போது வலி அல்லது இடுப்பு வலி, உடலுறவுக்குப் பிறகு அல்லது மாதவிடாய் சுழற்சி நின்ற பிறகும் இரத்தப்போக்கு வருதல், அதிகப்படியான வெள்ளை அல்லது இரத்தம் தோய்ந்த வெளியேற்றம், குறிப்பாக மாதவிடாய் சுழற்சி நின்ற பிறகு அதிகப்படியான, துர்நாற்றதுடன் வெளியேறுதல்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள்:

இந்த புற்றுநோயின் தொடர்ச்சியான வளர்ச்சியில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, வருடந்தோறும் வழக்கமான உடல் பரிசோதனைகள், பேப் பரிசோதனைகள் மற்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ள யோசனைகள் ஆகியவற்றை மேற்கொள்ளலாம், மேலும் அதைத் தடுப்பது எப்படி என்று தெரியாத பெண்களும் இதைச் செய்யலாம்.

உங்கள் குடும்பத்தில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் யாருக்கேனும் இருந்திருந்தால், முன்கூட்டியே பரிசோதனை செய்ய பரிந்துரைக்கிறோம், புகைபிடிப்பது, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் உட்பட பல புற்றுநோய்களுடன் தொடர்புடையதாக இருப்பதால் புகைபிடிப்பதை நிறுத்துதல், கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்தவும், ஏனெனில் இது எச் பி வி / எஸ் டி டி தொற்றுகளில் இருந்து பாதுகாக்கிறது, வலுவான நோயெதிர்ப்பு அமைப்பு வேண்டும், ஏனெனில் வலுவான நோயெதிர்ப்பு சக்தி ஆரோக்கியமான வாழ்க்கையை குறிக்கிறது.

கிளமிடியா , சிபிலிஸ் மற்றும் எச்ஐவி போன்ற பால்வினை நோய்கள் எச் பி வி ஆபத்தை அதிகரிப்பதால் அதில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். உங்கள் மருத்துவர் ஆலோசனைப்படி எச் பி வி தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுங்கள்.

உடல் பரிசோதனையின் ஒரு பகுதியாக பேப் ஸ்மியர் சோதனைகளை தவறாமல் செய்வது நல்லது. இது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் உருவாகும் வாய்ப்பைக் குறைக்க உதவுகிறது. பல பிரசவங்களுக்கு உட்பட்ட அல்லது பாதுகாப்பற்ற உடலுறவு கொண்ட பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் அதிக ஆபத்தில் உள்ளனர் பாப் ஸ்மியர் ஆரம்ப கட்டத்தில் எச் பி வி தொற்று/புற்று நோயை கண்டுபிடித்தால், கருவுறுதலைப் பாதுகாக்கும் அறுவைசிகிச்சையாக பெண்களுக்கு கன்னிசேஷன் மட்டுமே தேவைப்படலாம், மேலும் அடுத்த குழந்தைக்காக அவர்கள் திட்டமிட இது பயனுள்ளதாக இருக்கும்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான சிகிச்சை:

உங்களுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் இருப்பதை உங்கள் மருத்துவர் உறுதிப்படுத்தினால், அதற்கு என்ன செய்யலாம் என்று அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதிலிருந்து மீள, மருத்துவர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிகிச்சைகளைப் பயன்படுத்தலாம்.

கதிர்வீச்சு, கீமோதெரபி, அறுவை சிகிச்சை, இலக்கு சிகிச்சை, நோயெதிர்ப்பு சிகிச்சை.

கடைசியாக, ஆரம்ப கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கலாம் மற்றும் சிகிச்சையளித்து குணப்படுத்த வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நீங்கள் எந்த தடுப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றால் மற்றும் மேற்கூறிய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை அனுபவித்தால், உடனடியாக உங்கள் மகளிர் மருத்துவ நிபுணரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

# லவ் டுடே 100 வது நாள் விழா கொண்டாட்டம்!

## "ஒரு புதுமுகத்தை நாயகனாக வைத்து அதோடு படத்தின் உருவாக்கத்தில் பெரும் சுதந்திரம் தந்த ஒட்டுமொத்த ஏஜிஎஸ் குழுவிற்கும் நன்றி - இயக்குநர் நடிகர் பிரதீப் ரங்கநாதன்




சென்னை, பிப்ரவரி, 17 2023: ஏஜிஎஸ் எண்டெர்டெயிண்மெண்ட் சார்பில் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ்.கணேஷ், கல்பாத்தி எஸ்.சுரேஷ் தயாரிப்பில், பிரதீப் ரங்கநாதன் நடித்து இயக்கிய லவ் டுடே படம் கடந்த ஆண்டின் பிளாக்பஸ்டர் வெற்றியாக மகுடம் சூடியது. அனைத்து தரப்பினரும் கொண்டாடிய இப்படம், தமிழ் சினிமாவில் நீண்ட இடைவேளைக்கு பிறகு, 100வது நாளை கடந்த திரைப்படமாக சாதனை படைத்துள்ளது. இப்படம் 100 நாட்களை கடந்ததை அடுத்து படக்குழுவினரை கௌரவிக்கும் விதமாக மிகப்பிரமாண்ட விழா நேற்று நடைபெற்றது. தமிழ் சினிமாவின் முன்னனி திரைப்பிரபலங்கள் கலந்துகொண்டு படக்குழுவினருக்கு ஷீல்ட் வழங்கினார்கள். இந்நிகழ்வினில்..

எடிட்டர் மோகன் கூறியதாவது...

"ஏஜிஎஸ் உடைய புகழ் காலம் காலமாக நிலைத்து நிற்கும். தனித்துவமான படங்களை அவர்கள் தொடர்ந்து கொடுத்து வருகின்றனர். பிரதீப் முதல் படமும் வெற்றியை கொடுத்தார், இரண்டாவது படமும் இன்று வெற்றியை கொடுத்து நாயகனாக இருக்கிறார். இந்த படத்தில் பணிபுரிந்த இயக்குநரும் தொழில்நுட்ப கலைஞர்களும் அடுத்தடுத்து பல வெற்றி படங்களை கொடுக்க வேண்டும், அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்."

இயக்குநர் ஆர் வி உதயகுமார் பேசியதாவது...

"நூறு நாட்கள் விழா நடந்து பல ஆண்டுகள் ஆகிறது. லவ்டுடே திரைப்படம் 100 நாட்களை தாண்டி ஓடிக்கொண்டு இருக்கிறது. இயக்குநருடைய முதல் படமே எனக்கு மிகப்பிடித்தமான ஒன்றாக இருந்தது. இந்த படத்தை அதிக பொருட்செலவில், அதிக அர்ப்பணிப்பில், அதிக சிரத்தையில், அதிக உழைப்பில் உருவாக்கியுள்ளனர். பிரதீப் இன்னொரு தனுஷாக வருவார், இப்படத்தில் உழைத்த அனைவருக்கும் வாழ்த்துகள்." இயக்குநர் மோகன்ராஜா கூறியதாவது...

"ஏஜிஎஸ் எனது குடும்பம் போன்றது. ஏஜிஎஸ் உடன் நான் 16 ஆண்டுகளாக பயணித்து வருகிறேன். எனது வாழ்கையில் மிகமுக்கியமான தனி ஒருவன் படம், ஏஜிஎஸ்-ஆல் தான் தயாரிக்கப்பட்டது. லவ்டுடே திரைப்பட வெற்றிக்கு படக்குழுவினர் மிகவும் தகுதியானவர்கள். இந்த படத்திற்காக இயக்குநர் பிரதீப்பிற்க்கு நன்றி கூறி கொள்கிறேன். பிரதீப் பலருக்கு இன்ஷ்பிரேசன். இதுபோன்ற பல படங்களை ஏஜிஎஸ்-தர வேண்டும்."

நடிகர் சதீஷ் கூறியதாவது...

ஏஜிஎஸ் தொடர்ந்து இரண்டு புதுமுக கதாநாயகர்களை வைத்து திரைப்படம் எடுத்தார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். இதுபோன்று அவர்கள் தொடர்ந்து வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். பிரதீப் உடைய இந்த வெற்றி உண்மையான வெற்றி. அவர் இதை தாண்டுவதற்கே அடுத்து கடினமான உழைப்பை கொடுக்க வேண்டும். மிகச்சிறந்த வெற்றியை அவர் பதிவு செய்து இருக்கிறார். ஒட்டுமொத்த படக்குழுவிற்கும் எனது வாழ்த்துகள்."

இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா பேசியதாவது...

"இந்த படத்தின் இசையை பொறுத்தவரை எனது குழுவிற்கும், பாடகர்களுக்கும், பாடலாசிரியர் பிரதீபிற்கும் எனது நன்றி. இந்த படத்தின் கதையை கேட்டவுடன், இது ஹிட் என்று நான் முடிவுக்கு வந்துவிட்டேன். இந்த படம் ஏஜிஎஸ்-க்கு மிகப்பெரிய வெற்றியை கொடுத்து இருக்கிறது, அதற்கு வாழ்த்துகள். இதுபோன்ற பல வெற்றிகளை அவர்கள் அடைய வேண்டும் அதற்கு என்னுடைய வாழ்த்துகள்."

டாக்டர் ஐசரி கணேஷ் பேசியதாவது...

சினிமாவில் பல ஆண்டுகளாக 100 நாள் நிகழ்ச்சி இல்லை. ஏஜிஎஸ் இப்போது அதை செய்து இருக்கிறார்கள். அதில் நான் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி. பிரதீப் உடைய முதல் படத்தை நான் தயாரித்ததில் மிகவும் மகிழ்ச்சி. அதுவும், நூறு நாள், இதுவும் நூறு நாள், இதுபோன்று தொடர்ந்து அவர் பல வெற்றிகளை குவிக்க வேண்டும். பிரதீபிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்."

நடிகை இவானா பேசியதாவது...

"இந்த படத்தின் வெற்றி மிகப் பெரிய மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது. இந்த வெற்றி விழா மேடையில் நான் இருப்பது என் வாழ்கையின் மிகமுக்கியமான தருணம். இயக்குநராகவும், நடிகராகவும் பிரதீப் ஒரு மிகச்சிறந்த மனிதர். இந்த படக்குழு கொடுத்த அரவணைப்பு எனது வாழ்கையின் மிகமுக்கியமான ஒன்றாக மாறியிருக்கிறது. என்னுடன் இந்த படத்தில் பணிபுரிந்தத அனைவருக்கும் இந்நேரத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன்."

கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி கூறியதாவது...

"பிகில் திரைப்படத்திற்கு பிறகு இந்த மேடை பெரிய மகிழ்ச்சியை கொடுத்து இருக்கிறது. லவ்டுடே கதையை கேட்கும் போதே நம்பிக்கையை கொடுக்க கூடிய வகையில் இருந்தது. அது தான் படத்தின் சிறப்பு என்று நினைக்கிறேன். கொரோனாவிற்கு பிறகு பல திரைப்படங்கள் வெளியாயின. லவ்டுடே போன்ற பெரிய ஹீரோ இல்லாத படத்தை எப்படி வெளியிட போகிறீர்கள் என்று பலர் கெட்ட போது, இயக்குநர் முழு நம்பிக்கையுடன் இருந்தார். இந்த வெற்றி மிகப்பெரிய நம்பிக்கையை தந்துள்ளது. இந்த படத்திற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி."

இயக்குநர் நடிகர் பிரதீப் ரங்கநாதன் பேசியதாவது...

"ஒரு புதுமுகத்தை நாயகனாக வைத்து திரைப்படம் எடுக்க பலர் முன் வர மாட்டார்கள். ஆனால் ஏஜிஎஸ் அதற்கு முன் வந்தார்கள். அதோடு அவர்கள் எனக்கு இந்தப்படத்தின் உருவாக்கத்தில் பெரும் சுதந்திரம் தந்தார்கள். அதற்கு ஒட்டுமொத்த ஏஜிஎஸ் குழுவிற்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த படத்தின் இசையை பொறுத்தவரை யுவன் சாரிடம், நிறைய விஷயங்களில் கூடுதலாக, ஈடுபாட்டுடன் இயங்கினேன். யுவன் சார் மிக அற்புதமான இசையை தந்தார். அடுத்ததாக எனது தொழில்நுட்பக்குழு, அவர்களது பணி அளப்பறியது. அவர்களும் நடிகர்களும் இந்தப் படத்தை மேம்படுத்தினார்கள். அதன் பிறகு மக்கள் கொடுத்த ஆதரவில் தான் இந்த படம் பெரிய படமாக மாறியது. இந்த படத்திற்காக உழைத்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கொள்கிறேன்."

# அண்ணா எம்ஜிஆர் திராவிட மக்கள் கழகத்திற்கு மீண்டும் கடாய் சின்னம் வழங்கிய தேர்தல் ஆணையத்திற்கு நன்றி - நிறுவனத் தலைவர் டாக்டர் முத்துராமன் சிங்கப்பெருமாள்



சென்னை, பிப்ரவரி, 17 2023: சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்ற இப்பத்திரிக்கையாளர் சந்திப்பில் நடைபெற உள்ள ஈரோடு இடைத் தேர்தலில் எங்கள் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றால் தொகுதி வாக்காளர்களுக்காக குரல் கொடுத்து நாங்கள் கொடுத்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

அண்ணா எம்ஜிஆர் திராவிட மக்கள் கழகம் என்கிற எங்கள் கட்சி 2018 தலைமை தேர்தல் கமிஷனில் பதிவு செய்யப்பட்டு இதுவரை மூன்று முறை தேர்தலை கடாய் சின்னத்தில் சந்தித்து கணிசமான வாக்குகளை பெற்றுள்ளோம் இந்த முறை ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் எங்களுடைய வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அதிகாரி ஏற்றுக்கொண்டு எங்களுக்கு கடாய் சின்னத்தை மீண்டும் கொடுத்துள்ளார் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் எங்கள் கட்சியின் சார்பில் ஒருவரை வேட்பாளராக நியமித்துள்ளோம் என்றார் மேலும் பேசிய அவர், சாயக்கழிவு சுத்தகரிப்பு தொழிற்சாலை நவீன முறையில் அமைக்கப்படும்.

துணிகளுக்கு சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் இயற்கைக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நடைமுறையில் உள்ள இடையூறுகள் அகற்றப்பட்டு முறைப்படுத்தப்படும்.

வேலை இல்லா திண்டாட்டத்தை போக்குவதற்கு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் மேம்படுத்தும் வண்ணத் திட்டங்கள் வகுக்கப்படும்.

குடும்பத்திற்கு ஒரு அரசு அதிகாரி கட்டாயம் என்ற நோக்கில் அனைவரும் பயன்பெறும் நோக்கில் இலவச தேர்வு பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.

பெண்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டு நீடித்து நிலைத்து வளர்ச்சி பெறுவதற்கு வழிகாட்டுதல்களும் உதவிகளும் செய்து தரப்படும்.

பயன்பாடு இல்லாத அரசு கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டு மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்படும்.

இயற்கை சீர் கேடுகளான நீர் மாசுபாடு, நிலம் மாசுபாடு, காற்று மாசுபாடு போன்றவற்றை களைவதற்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சமூக நலத்திட்டங்கள் சீர்மைப்படுத்தப்படும்.

அரசு பள்ளிகள் பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாணவர்கள் உதவியுடன் புதுப்பிக்கப்படும் மற்றும் கட்டிடங்கள் சீர்படுத்தப்படும்.

அனைத்து அரசு பள்ளிகளிலும் கழிப்பறை வசதி இருப்பது 100%.

ஆரம்பப் பள்ளிகளில் புலன் சார்ந்த கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

அனைத்து பள்ளிகளிலும் புத்தக பூங்காக்கள் முறையாக செயல்பட பள்ளிகளில் ஆசிரியர் குழுக்கள் மூலம் கண்காணிக்கப்படும்.

மஞ்சள் கொள்முதல் நிலையங்கள் அமைத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக மாற்றப்பட்டு சந்தை படுத்தப்படும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவோம் என்றார்.

இந் நிகழ்ச்சியில் அண்ணா எம்ஜிஆர் திராவிட மக்கள் கழகத்தின் மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சி எம் ஈ குழுமத்துடன், டபிள்யூ டி ஐ கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஒப்பந்தங்களுக்கான தரவு உரிம ஒப்பந்தத்தில், என் எஸ் ஈ கையெழுத்திட்டது

சென்னை, பிப்ரவரி, 17 2023: இந்தியாவின் முன்னணி பங்குச் சந்தையான நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் என் எஸ் ஈ) ஆனது, உலகின் முன்னணி பங்குகள் சந்தையிடமான சி எம் ஈ குழுமத்துடன், இந்திய சந்தை பங்கேற்பாளர்களுக்கான நைமெக்ஸ் டபிள்யூ டி ஐ கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு (ஹென்றி ஹப்) பங்குகள் ஒப்பந்தங்களை பட்டியலிடவும், வர்த்தகம் செய்யவும் மற்றும் தீர்வு செய்யவும் என் எஸ் ஈ ஐ அனுமதிக்கும் தரவு உரிம ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

நைமெக்ஸ் டபிள்யூ டி ஐ கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு (ஹென்றி ஹப்) ஒப்பந்தங்களின் சேர்த்தல் ஆனது, என் எஸ் ஈ தயாரிப்பு வழங்கல் மற்றும் அதன் ஒட்டுமொத்த சரக்கு பிரிவை விரிவுபடுத்தும். கூடுதல் ஊக பங்குகள் ஒப்பந்தங்களைத் தொடங்க அனுமதி கோரி இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்திற்கு (செபி), என் எஸ் ஈ விண்ணப்பித்துள்ளது.

என் எஸ் இ யின் தலைமை வணிக மேம்பாட்டு அதிகாரி திரு ஸ்ரீராம் கிருஷ்ணன் : "செபியிடம் இருந்து ஒப்புதல் பெறப்பட்டவுடன், என் எஸ் ஈ தளத்தில் ரூ.இல் தீர்வு செய்யப்படும் இந்த இரண்டு உலகளாவிய அளவுகோல்களின் ஊக பங்குகளில் என் எஸ் ஈ வர்த்தகம் செய்ய முடியும். நைமெக்ஸ் டபிள்யூ டி ஐ கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு (ஹென்றி ஹப்) ஒப்பந்தங்கள், உலகம் முழுவதிலும் இருந்து ஆர்வத்தை உருவாக்கும் உலகின் மிகவும் வர்த்தகம் செய்யப்படும் பொருட்களின் பங்குகள் ஒப்பந்தங்களில் ஒன்றாகும். எங்கள் எரிசக்தி ஆதாரங்களை விரிவுபடுத்த எங்களுக்கு உதவுவதால் இந்த ஒப்பந்தத்தில் நுழைவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது, மேலும் இந்த ஒப்பந்தங்கள் இந்திய சந்தையில் பங்கேற்பாளர்கள் தங்கள் விலை இடர் மேலாண்மை நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நோக்கங்களை சந்திக்க பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.



**இந்தியாவின் ஜி20 பிரசிடென்சியின் கீழ் விவசாய பணிக்குழுவின் முதல் கூட்டம் பிப்ரவரி 13 அன்று தொடங்கியது. கூட்டத்தின் முதல் நாளில், இந்தூரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ராஜ்வாடா அரண்மனையில் பிரதிநிதிகளுக்காக பாரம்பரிய நடைப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதையொட்டி, மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தினை கண்காட்சியை தொடங்கி வைத்தார். தினைகள் மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி தொடர்பான ஸ்டால்கள் கண்காட்சியின் போது முக்கிய ஈர்ப்புகளாக இருந்தன. ஜி20 அமைப்பின் 19 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தவிர, 10 சிறப்பு அழைப்பாளர்களும், 10 சர்வதேச அமைப்புகளின் 100 பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.**